# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.2, தியாகராயர் சாலை, (ஆலயம்மன் கோவில் அருகில்),எல்டாம்ஸ் ரோடு சந்திப்பு,
தேனாம்பேட்டை-600 018. தொலைபேசி எண்.243447590

**ஆணை நாள் 09.11.2020**

**முன்னிலை**

**திரு ரா. ராஜகோபால், இ.ஆ.ப., (ஓ)**
**மாநில தலைமைத் தகவல் ஆணையர்**

*****

**வழக்கு எண். SA-12274/SCIC/2019**

திரு R. Rajappa -- மேல்முறையீட்டாளர்

/எதிர்

பொதுத் தகவல் அலுவலர்
சென்னை பெருநகர வளர்ச்சி குழுமம் பொது அதிகார அமைப்பு
எழும்பூர், சென்னை-8.

## ஆணை

மனுதாரர் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, பிரிவு 6(1)-ன்கீழ் 26.08.2019 தேதியிட்டு பொதுத் தகவல் அலுவலருக்கு அனுப்பிய மனுவில், பார்வையில் 1) Lr.No. 1033/2019/அ4 Dt:14.06.2019 from the commissioner, St.Thomas Mount Panchyat Union, Chitlapakkam. 2) Letter dated 22.06.2019 from Sai Sankalpcharitable Trust. என்று குறிப்பிட்டு இது தொடர்பான தகவல்களை கோரியுள்ளார். பொதுத் தகவல் அலுவலர் 26.09.2019 தேதியிட்டு மனுதாரருக்கு பதில் அனுப்பியுள்ளார். அதன்பின்னர் மனுதாரர் பிரிவு 19(1)-ன்கீழ் 24.10.2019 அன்று முதல் மேல் முறையீட்டு மனுவை அனுப்பியுள்ளார். இதன் பின்னர் மனுதாரர் பிரிவு 19(3)-ன்கீழ் 04.12.2019 தேதியிட்டு இரண்டாம் மேல் முறையீட்டு மனுவை தமிழ்நாடு தகவல் ஆணையத்திற்கு அனுப்பியுள்ளார்.

2. மேற்சொன்ன இரண்டாம் மேல் முறையீட்டு மனுவின்மீது இவ்வாணையத்தால், 25.07.2020 அன்று பிறப்பிக்கப்பட்ட ஆணையில், மனுதாரர் கோரும் தகவல்களை முழுமையாக வழங்குவதற்கு கடைசி வாய்ப்பு வழங்கும் வண்ணம் பொதுத் தகவல் அலுவலருக்கு ஆணையிடப்பட்டிருந்தது.

3. மேலே குறிப்பிட்டுள்ள தமிழ்நாடு தகவல் ஆணையத்தின் ஆணையின்பால் மனுதாரரின் கவனம் ஈர்க்கப்படுகிறது. அந்த ஆணையில் மேற்கூறப்பட்ட வழக்கில் பொதுத் தகவல் அலுவலர் தகவல்களை வழங்க பணிக்கப்பட்டிருந்தார். அத்தகவல்களை பொதுத் தகவல் அலுவலர் கடித எண். G/PIO/11622/2019 நாள்:15.09.2020 தேதியிட்ட கடிதத்தின் வாயிலாக மனுதாரருக்கு வழங்கியதாக தெரிவித்துள்ளார். மனுதாரரும் தமது கோரிக்கைகளுக்கு அனைத்துத் தகவல்களையும் பொதுத் தகவல் அலுவலர் வழங்கிவிட்டதாகவும், பெறப்பட்ட தகவல்களில். தான் மனநிறைவு அடைவதாகவும் தெரிவித்தார். **ஆகவே வழக்கை முற்றாக்கி ஆணையிடப்படுகிறது**

**ஒம்/-(ரா. ராஜகோபால்)**
**மாநில தலைமைத் தகவல் ஆணையர்**
**//ஆணைப்படி//**

**உதவிப்பதிவாளர்**

**<u>வழக்கு எண். SA-1227SCIC/2019</u>**
<u>பெறுநர்</u>
<u>பொது அதிகார அமைப்பு</u>
பொதுத் தகவல் அலுவலர்
சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமம்
தாளமுத்து நடராஜன் மாளிகை
காந்தி இர்வின் சாலை
எழும்பூர், சென்னை-8

<u>மனுதாரர்</u>

Thiru R. Rajappa
No.104, Mallees Arcadiaa.
Chokkalingam Nagar,
A.G.S Colony
Chennai-600 091

ds/pc